# பொதுக்காலம் 31 ஆம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

இணைச்சட்ட நூலிலிருந்து வாசகம் 6: 2-6,

திபா 18: 1-2, 2-3. 46,50,

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம் 7: 23-28,

மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 12: 28b-34)

## திருப்பலி முன்னுரை:

இறை அன்பிற்கு முழுவதும் சொந்தமாயிருக்கும் ஆண்டவரின் அன்பு மக்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கத்தை உரியதாக்குகிறேன். ஆண்டின் **பொதுக்காலம் 31 ஆம் வார ஞாயிறு** வழிபாட்டில் பங்கேற்றுக் கொண்டிருக்கும் நாம் அனைவரும் இறை அன்பிற்கு முற்றிலும் உரியவர்கள்.

மக்கள் நலப் பணிகளாக இருந்த சூழலில், அவரிடம் குற்றம் காணப்புறப்பட்ட பரிசேயரும், மறைநூல் அறிஞரும் கேட்ட, தொடுத்த வினாக்களில் இறை அன்பும், மாந்த நேயமும் மாண்புற்ற நிலையிலேயே விளங்க, நன்றாகப் பதிலுறுத்ததை அறிந்த மறைவல்லுனர் ஒருவர் திருமகன் இயேசுவிடம் முதன்மையான, மேலான கட்டளை எது எனக் கேட்டார். இயேசுவும் அவரிடம் ”உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழுமனத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக” என்பது முதன்மையான கட்டளை அத்துடன் ”உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக” என்பது இரண்டாவது கட்டளை. இவற்றைவிட மேலான கட்டளை வேறு எதுவும் இல்லை” என்று கூறி எல்லா நற்செயல்களுக்கும் இறை அன்பும் பிறர் அன்பும்தான் அடிப்படை என்பதைத் தெளிவாக்கினார். ஆகவே இறைமகன் இயேசுவைப் பின்பற்றி வாழ வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**எம் இறைவா,**

உம் அன்புத் திருச்சபையை காத்து வழிநடத்தி இறந்த திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், அனைவரும் உம் இரக்கமும் அருளையும் பொழிந்து உம் வானக வீட்டில் சேர்த்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நீதியின் இறைவா,**

எம் நாட்டை ஆண்டு இறந்த தலைவர்கள், பொதுமக்கள், தியாகிகள் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். உயிர்தெழுதலும், வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்வோர் இறப்பிலும் வாழ்வார் என்ற உம்வார்த்தையில் நம்பிக்கைகொண்டு இறந்த அனைவரின் பாவங்களை போக்கி அவர்களை உம் வானக வீட்டில் சேர்த்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**எங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்யும் தந்தையே!**

எம் பங்கை வழிநடத்தி இறந்த பங்கு குருக்களுக்காவும், பங்குமக்களுக்காகவும் மன்றாடுகிறோம். உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார் என்பதிற்கினங்க உம்மீது நம்பிக்கை கொண்டு வாழ்ந்து இறந்த ஆன்மாக்கள் அனைத்தும் தங்களுடைய பாவங்களினால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருந்தாலும் அவர்களை நிறைவாக ஆசிர்வதித்து உம் வானக வீட்டில் சேர்த்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**அன்பின் இறைவா,**

யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக சிறப்பாக மன்றாடுகிறோம். அவர்கள் தாங்கள் செய்த பாவங்களினால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருந்தாலும் அவர்கள் வேதனை குறைந்து உம் தெய்வீக விருந்தில் பங்குபெற அவர்களை ஆசிர்வதித்து உம்மிடம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**எல்லாருக்கும் எல்லாம் ஆன எம் அன்பு இறைவா!**

மரணத்தறுவாயிலுள்ள துன்புறும் அன்பர்கள் அனைவரும் இறைமகன் இயேசுவின் நிலையான அமைதியையும், பேரின்பவீட்டின் இன்பத்தையும் முழுமையாகப் பெற்றிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**அனைவரையும் உயிர்த்தெழச் செய்யும் அன்புத் தந்தையே இறைவா!**

எமது நாட்டில் ஏற்பட்ட போரில் இறந்து போன அனைவருக்கும் நித்திய இளைப்பாற்றியை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.